பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 03 | ஞாயிற்றுக்கிழமை | 20.10.2024 | அதிர்வு 79

## உள்ளூராட்சித் தேர்தல் பழைய வேட்பு மனுப்படி!

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிய வேட்புமனுக்கள் கோரப்பட மாட்டாது என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு முற்பகுதியில் 06

# தலைவர் ஏற்காத ‘13’ ஐ இப்போது அரசியல் தலைவர்கள் ஏற்கின்றனர்

## வேறு என்னதான் செய்வது என்று வழியின்றி அப்படி முடிவு என விளக்குகின்றார் ரவிகரன்



(கி.வசந்தன்)

‘3ஆவது திருத்தத்தை எமது தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எமது அரசியல் தலைவர்கள் வேறு என்னதான் செய்வது என்று அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அதில் காணி அதிகாரம் இல்லை, பொலிஸ் அதிகாரமும் இல்லை. பிறகு எதற்காக எங்களுக்கு அந்த அதிகாரப் பகிர்வு என வட மாகாணசபை உறுப்பினரும், வன்னி மாவட்ட தமிழரசுக் கட்சியின் வேட்பாளருமான து.ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

ஆகையினால் இந்தியா இனிமேலும் பச்சோந்தித் தனமாக இருக்க கூடாது என்றும் அவர் கூறினார். 06

# பெப்ரவரியில் வரும் அடுத்த பட்ஜட்டில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

## தங்காலைக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர அறிவிப்பு

2025 பெப்ரவரியில் கொண்டு வரப்படும் வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து அவதானம் செலுத்தப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தியின் முதலாவது மக்கள் பேரணி நேற்று தங்காலையில் இடம்பெற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“துணிச்சல் மிக்கவர்களால் முடியாதது எதுவுமில்லை என்பதை நிரூபித்துள்ளோம். ஆரம்பத்தில், பொருளாதார ஸ்திரத்தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துவதே எங்களின் மிகப்பெரிய சவாலாக 06






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா நேற்றுப் பிற்பகலில் திடீர் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணத்தில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டார்.

நேற்றுப் பிற்பகலில் அவரது ஒரு பக்க கைப்பகுதியிக் தொடர்ந்து விறைப்புக் காணப்பட்டமையால் அவர் உடனடியாக தனியார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு விரையப்பட்டார். எனினும் யாழ்பாணத்தில் ஆஸ்பத்திரியை அவர் அடைவதற்கு முன்னரே அவரது கைவிறைப்பு எடுபட்டு விட்டதாக கூறப்பட்டது. ஆயினும், வைத்தியசாலையில் அவரது இதயத்துடிப்பு தொடர்பான ஈ.சி.ஜி. பதிவில் சில அசாதாரண நிலைமைகள் தென்பட்டமையால் அவர் தொடர்ந்து மருத்துவ சிகிச்சைக்கும் மருத்துவக் கவனிப்புக்கும் உட்படுத்தப்பட்டார். சிறிய அளவில் இதயத் தாக்கு நோய்க்கு அவர் ஆளாகியிருக்க கூடும் என்று சந்தேகிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சி தலைவர் பதவியைத் 06




# தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்றைய தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் வடக்கு வீதியில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனும், சக வேட்பாளர்களாக வரதராஜன் பார்த்திபன், தவச்செல்வம் சிற்பரன், முருகானந்தன் யசிந்தன் கதிரேசன் சஜீதரன், குலேந்திரன் செல்ரன், அருள்பரன் உமாகரன், நாவலன் கோகிலவாணி மற்றும் மிதிலைச் செல்வி ஸ்ரீபத்மநாதன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.











# ஜனாதிபதி அநுரவால் மாத்திரம் நாட்டை கட்டியெழுப்ப முடியாது

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க திறமைசாலியாக இருந்தாலும் அவரால் மாத்திரம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் நேற்று இடம்பெற்ற பேரணியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் கடந்த 75 வருடங்களாக ஆட்சியிலிருந்த எவரும் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரம் கிடைக்கும் என நினைக்கவில்லை. அந்த அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்கினர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் மாத்திரம் இந்த நாட்டை கட்டியெழுப்புவது கடினம். இம்முறை நல்லதொரு அணியை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது மக்களின் பொறுப்பு.

நாட்டை மீட்பதற்கு வலுவான அமைச்சரவை மற்றும் முற்போக்கான நாடாளுமன்றம் அவசியம்.

எனவே நாட்டின் தரத்தை மாற்றியமைக்கும் குழுவொன்றை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் தற்போது மக்களிடம் ஏற்பட்டுள்ளது.” – என்றார்.


# நிமலராஜனின் நினைவு தினம் வவுனியா ஊடக அமையத்திலும்

## உணர்வு பூர்வமாக அனுஸ்டிப்பு

(கி.வசந்தன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் அவர்களின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அமையத்தின் செயலாளர் ப.கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அன்னாரது திருவுருவ படத்திற்கு ஒளி தீபம் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.











# வடமராட்சி ஊடக இல்லத்தில் நிமலராஜனின் நினைவேந்தல்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்றது.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் மூத்த ஊடகவியலாளர் எஸ்.தில்லைநாதன் தலைமையில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, நிமலராஜனின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.




# திடீர் உடல் நலக் குறைவால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

திடீர் உடல் நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், அல்வாய் வடக்கு, அல்வாயைச் சேர்ந்த கந்தையா கருணாநிதி (வயது- 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திடீர் உடல் நலக்குறைவு காரணமாக நேற்றுக் காலை தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின்னர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பருத்தித்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.



CaFEE
නිදහස් හා සාධාරණ මැතිවරණයක් සඳහා වූ ජනතා ව්‍යාපාරය
நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்
Campaign for Free & Fair Elections

# பெண்களுக்கு சரியான முறையில் இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை

## கபே அமைப்பு தெரிவிப்பு

மட்டக்களப்பில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ள கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள், பெண்களுக்கு சரியான முறையில் இட ஒதுக்கீட்டை வழங்கவில்லை என கபே எனப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

காத்தான்குடியில் உள்ள கபே அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையிலே நூற்றுக்கு 50 சதவீதம் பெண் வாக்காளர்கள் உள்ளனர். எனினும், வேட்பு மனு தாக்கல் செய்யும் சந்தர்ப்பத்தில் பெண்களுக்கு சரியான முறையில் இட ஒதுக்கீடு வழங்கப்படாமல் உள்ளது.

சில கட்சிகளில் சுயேச்சைக் குழுக்களில் பெயரளவில் மாத்திரமே ஒரு பெண் வேட்பாளரை உள்ளடக்கியுள்ளனர்.

இலங்கையிலே அனைத்து அரசியல்வாதிகளும் உயர் மட்டத்தில் இருக்கக்கூடிய தலைவர்களாக இருப்பினும் உள்ளக ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய அரசியல்வாதிகள் மிகவும் குறைவானதாகக் காணப்படுகின்றனர்."– என்றார்.

# வெள்ளப் பகுதி நிலத்தில் விளையும் காய்கறிகளை உட்கொள்ள வேண்டாம்



வெள்ளம் தணிந்தாலும், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் நிலத்தில் விளையும் காய்கறிகளை உட்கொள்ள வேண்டாம் என ஊட்டச்சத்து நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கனமழை காரணமாகக் கழிவறைகளிலிருந்து வரும் அழுக்கு நீர் மற்றும் பல அழுக்கு பொருள்கள் தண்ணீரில் கலந்து நிலத்தில் தேங்குவதால் நிலத்தில் விளையும் காய்கறிகளை உட்கொள்வது மிகவும் ஆபத்தானது என அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், இந்தக் காலப்பகுதியில் வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால் கொதித்தாறிய நீரைப் பருகுவது அவசியம் எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தாம் ராஜினாமாச் செய்து விட்டார் என அவர் அறிவித்திருந்த போதிலும், நேற்றும் முன்தினமும் அவர் யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசு கட்சி அலுவலகத்திற்கு சென்று கட்சியின் இந்த தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத் தயாரிப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார் எனத் தெரிகிறது.

நேற்று முன்தினம் தமிழரசு அலுவலகத்துக்கு சுமந்திரனை அழைத்து, தேர்தல் விஞ்ஞாபனத் தயாரிப்பு பற்றி அவர் விரிவாக உரையாடினார் என தெரிகிறது.

2010ஆம் ஆண்டிலிருந்து சகல தேர்தல் விஞ்ஞாபனங்களையும் சுமந்திரனே வழமையாகக் கட்சியின் சார்பில் முன்னின்று தயாரித்து வருவதனால் இந்தத் தடவையும் அதனை செய்யும்படி அவர் சுமந்திரனைக் கேட்டுக் கொண்டார் என தெரிகிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட வேண்டியவை என்று தான் கருதும் விடயங்களைத்தான் தயாரித்து அனுப்புவார் எனச் சுமந்திரனிடம் குறிப்பிட்ட மாவை சேனாதிராஜா, நேற்றுக் காலையில் அந்த விடயங்களைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டார். தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இருந்த தமது உதவியாளர் மூலம் அவற்றை கணினியின் தட்டச்சு செய்து, சுமந்திரனுக்கு மின்னஞ்சல் மூலம் மாவை சேனாதிராஜா அனுப்பினார் என்றும் தெரிகிறது.

எனினும் அதன் பின்னர் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்ற தகவல் அறிந்து சுமந்திரனும், அவரோடு இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிடும் சுகிர்தனும் நேற்று முன்னிரவு வைத்தியசாலையில் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்து அவரின் சுகநலன் குறித்து விசாரித்து உரையாடினார்.

தொடர்ந்து அவரை ஓய்வில் இருக்கும்படி கேட்டுக் கொண்ட சுமந்திரன், தேர்தல் விஞ்ஞாபனத் தயாரிப்பு வேலைகளை தாமே முன்னின்று செய்வார் என்று மாவை சேனாதிராஜாவிடம் உறுதியளித்தார் எனவும் அறிய வந்தது.

உடற்சுகவீனம் காரணமாக மாவை சேனாதிராஜா அடுத்து வரும் வாரங்களில் தேர்தல் தொடர்பான விடயங்களைத் தவிர்த்து ஓய்வில் இருக்க வேண்டியவராக இருப்பார் என்று கருதப்படுகின்றது.

ஏற்கனவே கட்சியின் தலைமை பதவியை தாம் துறந்து விட்டார் என மாவை சேனாதிராஜா அறிவித்துள்ள பின்னணியில் கட்சியின் மத்திய குழு கூடி கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து பின்னொரு நாளில் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## உள்ளூராட்சித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கோரப்பட்ட வேட்புமனுக்களின் பிரகாரம் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அடுத்த ஆண்டில், சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில், நிலுவையாகவுள்ள அந்தத் தேர்தலை அடுத்து நடத்தத் தேர்தல் ஆணைக்குழு தயாராகி வருகின்றது.

# தேங்காய் விலை மேலும் அதிகரிப்பு



சந்தையில் தேங்காய் விலை வேகமாக அதிகரித்து வருவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, சில பிரதேசங்களில் தேங்காய் ஒன்று 170 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி அடுத்த சில நாள்களில் தேங்காய் விலையில் எவ்விதக் குறைவும் ஏற்படாது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

---

## தலைவர் ஏற்காத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அபிவிருத்தியோடு எமது தீர்வை நோக்கி பயணிப்பதே எமது இலக்கு. ஆனால் எமது நிலம் இருந்தால் மாத்திரமே அந்த அபிவிருத்தியை செய்ய முடியும். எமது நிலம் எமது உரிமை. அது இல்லாவிட்டால் ஒன்றுமே இல்லை.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாரிய நிலப்பரப்புக்கள் பறிபோய்க் கொண்டு இருக்கின்றன. எமது போராட்டங்களின் ஊடாக குறுகிய அளவை என்றாலும் நாம் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம்.

எமது மதத்தை அழித்து, பௌத்த மதத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று இனவாதிகள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றனர். பொலிஸ், இராணுவம் என நாட்டின் அனைத்து படைகளும் அவர்களுடையவை. இந்த படைகள் கொஞ்சம் கூட நீதி நியாயம் இல்லாமல். பௌத்த மதத்திற்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் தமது விசுவாசத்தினை காட்டும் நோக்கத்துடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அதற்கு மாறாக நாங்கள் களத்திலே நிற்கின்றோம். எங்களைக் காத்தவர்கள் இன்று மௌனிக்கப்பட்ட நிலையில் மக்களாகிய நாங்கள் எமது உரிமைக்காக போராட வேண்டிய காலம் இன்னும் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. போராடிக்கொண்டுதான் இருக்கிறோம். தீர்வு தான் கிடைக்கவில்லை.

மாற்றம் என்று கூறப்படும் இந்த ஆட்சி ஒரு வருடத்தை கடந்தபின்தான் தெரியும் இதன் போக்கு எப்படி இருக்கிறது என்று.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சர்வதேசம் பாராமுகமாக இருக்க கூடாது. இந்தியா பச்சோந்தி தனமாக இருக்க கூடாது. 13 ஆவது திருத்தத்தை எமது தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எமது அரசியல் தலைவர்கள் வேறு என்னதான் செய்வது என்று அதனை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அதில் காணி அதிகாரம் இல்லை. பொலிஸ் அதிகாரமும் இல்லை. பிறகு எதற்காக எங்களுக்கு அந்த அதிகாரப் பகிர்வு?

எமது நிலத்தை முழுவதுமாக பறித்து விட்டால் நாங்கள் எங்கே செல்வது? இலங்கை தமிழன் ஆண்ட பூமி. எனவே எமக்கான தீர்வை ஏதோ ஒரு விதத்தில் இவர்கள் தரத்தான் வேண்டும். தட்டிக் கழிக்க முடியாது. எனவே இதற்கு எதிராக எமது குரல்கள் தொடர்ச்சியாக ஒலித்துக் கொண்டிருக்கும். – என்றார்.

---

## பெப்ரவரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இருந்தது.

மிகக் குறுகிய காலத்திற்குள், நாட்டுக்கு சாதகமான ஜனநாயக அமைப்புகளுடன் மிகச் சிறந்த ஒப்பந்தங்களைச் செய்து நம்பகமான பொருளாதாரத்தை உருவாக்கியுள்ளோம்.

பெப்ரவரி மற்றும் மார்ச் மாதத்திற்குள் பட்ஜெட் தாக்கல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வரவு – செலவுத் திட்ட ஆவணத்தில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம்.

எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தில் ஏழைகள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை நிச்சயமாக அதிகரிப்போம்" என்றார்.








## வெடிகுண்டு எச்சரிக்கை:

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் சோதனை செய்யப்பட்ட விமானம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் காரணமாக இந்திய விமானமொன்று விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மும்பையிலிருந்து நேற்று பிற்பகல் 3 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தியாவின் விஸ்தாரா விமானச் சேவைக்கு சொந்தமான விமானமொன்றே இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, விமானத்திலுள்ள பயணிகள் மற்றும் விமான பணிக்குழாமினர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, விமானத்தினுள் சோதனை நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி, விமானம் தரையிறங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக, விமானிக்கு வந்த அநாமதேய அழைப்பினூடாக இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இந்த அச்சுறுத்தல் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, முன்னெடுக்கப்பட்ட சோதனையில் எந்தவித அச்சுறுத்தலும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# கட்டுநாயக்க ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுக்கு திடீர் சுகவீனம்

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றின் பணியாளர்கள் சிலர் திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காலை உணவை உட்கொண்டதன் பின்னர் ஏற்பட்ட ஒவ்வாமையின் காரணமாக அவர்கள் இவ்வாறு சுகவீனமடைந்துள்ளனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களில் 35 பேர் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையிலும், 6 பேர் சீதுவ விஜய குமாரதுங்க வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.





# கொழும்பு துறைமுகத்தில் இந்தியக் கடற்படை கப்பல்

இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். கல்பேனி அதிவேகத் தாக்குதல் கப்பல் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

இக்கப்பலின் கட்டளை அதிகாரி சுனில் குல்ஹாரி ஆவார்.

கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முதன்மையாக விளங்கும் இந்த கப்பலின் சேவை 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இலட்சத்தீவுகளில் ஒன்றான கல்பேனி தீவின் பெயரே இந்த கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

இந்த கப்பலானது கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகள், கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடப் பன்படுத்தப்படும்.

இந்த கப்பல் பல்வேறு தொழில்நுட்ப கருவிகளைக் நாட்டுக்கு கொண்டுவந்துள்ளது. இந்த பொருள்கள் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்படும்.

கப்பலின் பணியாளர்கள் கொழும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு இடங்களைக் கண்டுகளிக்கவுள்ளனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழரை அரவணைக்குக!

இலங்கையில் தீர்க்கப்படாத தேசிய இனப் பிரச்சினையின் விளைவாக வெடித்த இனவாத யுத்தம் சுமார் மூன்று தசாப்த காலத்தின் பின்னர் இலங்கை அரசின் ஆயுதப் படைகளினால் - அரச பயங்கரவாதத்தினால் - ஆயுத முனையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

யுத்தத்தின் முடிவில், மூன்று தசாப்த காலம் அந்த யுத்தத்தின் பிடியில் சிக்கியிருந்த வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் பல புதுவிதமான மாற்றங்கள், திருப்புமுனைகள் ஏற்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

அதில் முக்கியமான ஒன்று சீன வல்லாதிக்கம் தனது பிடியை மெல்ல மெல்ல தமிழர் தாயகப் பிரதேசத்திலும் ஊன்ற முயற்சிப்பதாகும்.

இயல்பாகவே அருகில் உள்ள இந்திய தேசத்தோடு தொப்புள் கொடி உறவாகத் தம்மைக் கருதி நிற்கும் தமிழர்களுக்கு, அந்நிய சீனரின் வருகை சகிக்க கூடியதாகவோ ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவோ இல்லை என்பது யதார்த்த நிலைமை.

ஆயினும் அதனையும் தாண்டி, கடல் அட்டைப் பண்ணை ஊக்குவிப்பு, தமிழ் மீனவர்களுக்கு உதவி-ஒத்துழைப்பு, மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கல், உயர் கல்வி ஒத்துழைப்புக்கள், பல்கலைக்கழக கூட்டு ஏற்பாடுகள் என்ற பல்வேறு பரிமாணப் பெயர்களில் - வடிவங்களில் - தமிழர் தாயகத்துக்குள் மெல்லக் காலூன்ற சீனத் தரப்பு முயல்வதும், அதற்கு எதிராக தமிழ் மக்கள் நிலை எடுப்பதும் கடந்த ஒரு தசாப்த காலமாக தமிழர் தாயகத்தில் கட்டவிழும் விடயமாக உள்ளது.

இப்போது சீனச் சார்பு போக்குக் கொண்டது என்று கருதப்படும் தேசிய மக்கள் சக்தி ஆட்சிப் பீடம் அதிகாரத்துக்கு வந்திருப்பதால் சந்த் தரப்பு இலகுவாக தமிழர் தாயகத்திற்குள் காலூன்ற எத்தனிக்கும் என்ற எதிர்வு கூறல் பல மட்டங்களிலும் தெரிவிக்கப்படுகின்றது.

அதனைஉறுதிப்படுத்துமாற்போலமுன்னர் யாழ் பல்கலைக்கழகத்தினால் மறுக்கப்பட்ட கூட்டுக் கல்வி செயல் திட்டத்திற்கு மீண்டும் சீனத் தரப்பில் இருந்து அழுத்தம் வந்திருப்பதான செய்திகள் கசியத் தொடங்கியுள்ளன.

ஒருபுறம் சீனத் தரப்பு வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் காலூன்ற முயற்சிக்கின்றது என்றால், மறுபுறத்தில் அந்தத் தமிழர்களை அரவணைத்து அவர்களுக்கு நீதி நேர்மையாகச் செயல்படுவதில் பக்கத்து நாடான இந்தியா தவறு இழைத்து வருவதும் சீனாவுக்கு சார்பான களநிலையை ஏற்படுத்தி வருகின்றது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டிய உள்ளது.

இலங்கை விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் தவறு இழைத்து வருவதை இப்பத்தியில் சுட்டிக்காட்டி வருகிறோம். இலங்கை தீவில் தன்னுடைய உண்மையான நண்பர்கள் யார், கபடமான எதிரி யார் என்பதை இன்னமும் சரியாக வேறுபடுத்தி, அடையாளம் கண்டு, அதற்கேற்ப செயலாற்றுவதில் இந்திய இராஜதந்திரம் படுதோல்வி அடைந்திருக்கின்றது என்பதுதான் உண்மை நிலைமை.

இந்திய உபகண்டம் என்ற வல்லாதிக்க சக்திக்கு பக்கத்தில் இந்துணூண்டு அளவில் இருக்கும் இலங்கை, சீனாவைத் தன் பக்கம் வைத்துக்கொண்டு புதுடில்லியின் கண்களில் எண்ணை விட்டு ஆட்டிக் கொண்டிருக்கின்றது என்பது சர்வதேச ராஜதந்திரிகளின் அவதானிப்பு. கணிப்பு.

பக்கத்தில் இன்னொரு இறைமை உள்ள நாடு என்ற முறையில் கொழும்புடன் இணங்கி, இயைந்து சேர்ந்து செயல்பட வேண்டிய கடப்பாடு புதுடில்லிக்கு இருந்தாலும், இலங்கைத் தீவில் தமிழர் தேசத்திற்கு இருக்கின்ற தனித்துவ உரிமைகளை வலியுறுத்துவதில் இந்திராகாந்தி அம்மையார் காட்டிய வலிமையான போக்கை மெல்ல மெல்ல புதுடில்லி இராஜதந்திரம் கைவிட்டதால், இன்று சீனாவுடன் சேர்ந்து கொழும்பு கூட்டாக விடுக்க கூடிய இராஜதந்திர நகர்வர்களுக்கு எப்படி பதிலளிப்பது என்று தெரியாமல் முழுசும் நிலைமை புதுடில்லிக்கு வந்திருக்கின்றது.

வன்னி மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சுட்டிக் காட்டுவது போல, இந்தியா இனி மேலும் ஈழத் தமிழர் விடயத்தில் பச்சோந்திதனமாக இருக்கக் கூடாது, இலங்கைத் தீவில் தன்னுடைய உண்மையான நண்பர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு, அவர்களோடு இந்தியா தன்னை இன்னும் மேலும் நெருக்கமாக இணைத்துச் செயற்பட முன் வர வேண்டும். இது ஈழத் தமிழருக்கு மாத்திரமல்ல, இந்தியாவுக்கும் தேவையான - கட்டாயமான - நிர்ப்பந்தமாகும்.

# தி.மு.கவுக்கு இல்லாத கட்டுப்பாடு விஜய் மாநாட்டுக்கு மாத்திரம் ஏன்?

## சீமான் கேள்வி

“சேலத்தில் தி.மு.க. மாநாடு நடத்தும் போது கட்டுப்பாடு விதிக்கவில்லை. ஆனால், விஜய் நடத்தினால் இவ்வளவு இடையூறு செய்வது ஏன்?”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஈரோட்டில் தமிழக பண்பாட்டு கண்காட்சி நடைபெற்றது. இதனை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பார்வையிட்டார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ்த்தாய் வாழ்த்து பாடலில் திராவிட நல் திருநாடு என்று வார்த்தை நீக்கியதாக சொல்லுபவர்கள் ஆரியம் வழக்கொழிந்து உள்ளிட்ட வார்த்தைகளை தூக்கியது யாரு?. நாம் தமிழர் கட்சி அதிகாரத்திற்கு வந்தால் தமிழ்த் தாய் பாட்டு எடுக்கப்படும். அதற்கு என்ன செய்வார்கள். கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகம் தமிழகத்தின் நாக ரிகம் என்று தான் சொல்கிறது. ஆனால் இங்கு ஆட்சியில் உள்ளவர்கள் திராவிட நாகரிகம் என்று சொல்கிறார்கள். ஆளுநர் மாற்றுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இச்சூழலில் நாங்கள் கொந்தளித்தால் தான் மாற்றினார்கள் என்று சொல்வதற்கு தான் ஆளுநர் விவகாரத்தை பேசி வருகின்றனர்.

தீபாவளிக்கு தற்காலிகமாக 1,500 மதுக் கடைகளை திறக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதனை கவனத்தில் கொள் ளாத வகையில் திராவிடம் விடப்பட்டது என்ற பிரச்சினை பெரிதாகப்பட்டுள்ளது. சென்னையில் மொத்தமாக 2,500



கோடி ரூபா தான் மழைநீர் வடிகால் கட்டமைப்பு உருவாக்க தேவைப்படும்.

எனினும், ஒவ்வொரு ஆண்டும் மழை வெள்ளத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். யானை என்ன ஒரு கட்சிக்கு மட்டும் தான் என்ன சொந்தமா. இதையெல்லாம் விஜய் கண்டுக்கொள்ள மாட்டார். தங்களை அடையாளப் படுத்திக் கொள்ள தான் புகழ்பெற்ற விஜயை இடையூறு செய்து வருகிறார்கள். நடிகர் விஜய் என்னை எதிர்த்து வேலை செய்தாலும் அவரை ஆதரிப்பேன். ஏன் என்றால் அவர் என்னுடைய தம்பி. சேலத்தில் தி.மு.க. மாநாடு நடத்தும் போது கட்டுப்பாடு விதிக்கவில்லை.

ஆனால், விஜய் நடத்தினால் இவ்வளவு இடையூறு செய்வது ஏன். பரந்தூர் விமான நிலையம் ஒருபோதும் கட்ட முடியாது என்னை தூக்கி தான் சிறையில் போட முடியும்.” – என்றார்.

# மொழி அரசியலை இனியாவது தி.மு.கவினர் கைவிட வேண்டும்

## தமிழிசை சவுந்தரராஜன் தெரிவிப்பு



மொழி அரசியலை இனிமேலாவது தி.மு.க. கைவிட வேண்டும் என பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவரும், முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் நேற்று மதியம் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை சென்றார். தொடர்ந்து கோவை விமான நிலையத்தில் அவர் செய்தி யாளர்களிடம் கூறுகையில்,

“விமானத்தில் நான் வந்த ஒரு மணி நேரத்துக்குள் முதல்வர் ஸ்டாலின் ஏதாவது ட்வீட் போட்டு இருக்கிறாரா? தமிழுக்கு திமுகவினர் மட்டுமே உரிமையானவர்கள் என்பது போல பேசுகின்றனர். பா.ஜ.க. தமிழ்ப் பற்று இல்லாதவர்கள் என காட்ட முயற்சிக்கின்றனர். இதற்கான வெளிப்பாடுதான் பிரத மருக்கு முதல்வர் கடிதம் எழுதியது. ஏதாவது ஒரு காரணம் கிடைக்குமா என முதல்வர் பார்த்துக் கொண்டு இருக்கி றார்.

தமிழைச் சொல்லி மக்களை ஏமாற்றினோம். இனிமேலும் மக்களை ஏமாற்ற வேண்டும் என்பதுதான் அவர்களின் எண்ணம். மற்றொரு மொழியை சொல்லி தமிழை யாரும் சிறுமைபடுத்த முடியாது. மொழி அரசியலை இனிமேலாவது திமுக கைவிட வேண்டும். ‘இந்தி இசை’ என விமர்சனம்: என்னை கூட ‘இந்தி இசை’ என விமர்சிக்கின்றனர். தமிழ் என் உயிரிலும் இருக்கிறது. திமுகவினரின் குழந்தைகள் எத்தனை பேர் தமிழை படிக்கின்றனர்.

தமிழ்த்தாய் வாரம் கொண்டாடப்பட வேண்டும். தமிழ்த் தாய் வாழ்த்து விடுபட்டதில் எனக்கு ஒப்புதல் கிடையாது. உள்நோக்கம் இல்லாத ஒன்றை உள்நோக்கத்துடன் செய்ததாக காட்ட முயற்சிக்கின்றனர். தெரியாமல் செய்த தவறை பெரிதாக்குகின்றனர். எதையாவது பூதாகரமாக செய்து அரசியல் செய்ய பார்க்கின்றனர். இந்த இரட்டை வேடத்தை கண்டிக்கின்றோம்.

முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் இந்தி தினத்தை வாழ்த்தி பேசி விட்டு இப்போது இந்தியை எதிர்த்து பேசுகிறார். தமிழ் மொழிப்பாடத்தில் சில மாணவர்கள் தேர்ச்சி பெறுவது இல்லை. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளி பலகையில் உருது மொழியில் எழுது கிறார். இது மும்மொழியா அல்லது நான்கு மொழியா என்பதை அவர் விளக்க வேண்டும். சின்ன பிரச்சினையை பெரிதாக்க முயல்கின்றனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தவறுகளை திருத்த திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வது மகிழ்ச்சி. ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் சொன்னது போல சனாதானத்தை எதிர்த்தவர்கள் காணாமல் போவார்கள். கோவையில் தொடர்ந்து வெடிகுண்டு புரளி வந்து கொண்டு இருக்கிறது. இதுபோன்ற புரளிகளை காவல் துறை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

வடமாநிலத்தில் தமிழ் படிக்கின்றனர். இங்கு ஏன் இந் தியை தடுக்கின்றனர். வளரும் குழந்தைகளுக்கு மொழிகளை கிரகித்து கொள்ளும் தன்மை இருக்கிறது. திருநெல்வேலி யில் நீட் பயிற்சி மையத்தில் நடந்த தாக்குதல் சம்பவம் வேதனை அளிக்கிறது. இதற்காக நீட் தேர்வை குறை சொல்ல முடியாது. நீட் பயிற்சி மையங்களை கட்டுப்படுத்த வேண்டும். நீட் மையம் செல்லாமலே மாணவர்கள் தேர் வாகி இருக்கின்றனர். சென்னையில் ஏதோ சின்ன மழைக்கு செய்த பணிகளை பெரிதாக பேசுகின்றனர்.”– என்றார்.

# இந்தியா, பாகிஸ்தான் உறவில் புதிய அத்தியாயம் தொடக்கம்

## முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கருத்து



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த 15, 16 ஆகிய திகதிகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்றார்.

இதுதொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீபின் அண்ணனும் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப், இந்திய நிருபர்களுக்கு இஸ்லாமாபாத்தில் பேட்டி அளித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார். அவரது வருகை நல்ல தொடக்கம் ஆகும். இங்கிருந்தே இரு நாடுகளும் முன்னேறி செல்ல வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் இடையே புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது.

எனது ஆட்சிக் காலத்தில் இந்தியா, பாகிஸ்தான் உறவை சீர்படுத்த தீவிர முயற்சி செய்தேன். ஆனால் எனது முயற்சிகள் தோல்வி அடைந்தன. இந்திய பிரதமர் மோடி குறித்து பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அவதூறான கருத்துகளை தெரிவித்தார். இதன்காரணமாக இரு நாடுகள் இடையிலான உறவு பாதிக்கப்பட்டது. எனது ஆட்சிக் காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி லாகூரில் உள்ள எனது வீட்டுக்கு வருகை தந்தார். இது சாதாரண விஷயம் கிடையாது. அவரது வருகை சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது.

தற்போதைய சூழலில் இந்தியா, பாகிஸ்தான் தலைவர்களிடையே சுமுக உறவு இல்லை. ஆனால் இரு நாடுகளின் மக்களுக்கு இடையே நல்லுறவு நீடிக்கிறது. கிரிக்கெட் மூலம் இரு நாடுகளின் உறவை வளர்க்க வேண்டும். இந்தியாவில் இரு நாடுகளின் கிரிக்கெட் அணிகள் விளையாடினால் அந்த போட்டியை பார்க்க நான் இந்தியா வருவேன். இந்தியாவின் வேளாண் விளைபொருள்கள், இதர சரக்குகள் ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய்க்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து பாகிஸ்தானுக்கு இந்திய பொருட்கள் வந்து சேருகின்றன. இரண்டு மணி நேரத்தில் இந்தியாவின் அமிர்தசரஸில் இருந்து பாகிஸ்தானுக்கு சரக்குகளை கொண்டு வர முடியும். ஆனால் இப்போது டுபாய் வழியாக 2 வாரங்கள் கழித்து பொருள்கள் வந்து சேருகின்றன. இதனால் இரு நாடுகளுக்குமே லாபம் கிடையாது.

கடந்த 1999 ஆம் ஆண்டில் அப்போதைய இந்திய பிரதமர் வாஜ்பாய், லாகூருக்கு வருகை தந்தார். அவரது பாகிஸ்தான் வருகை தொடர்பான வீடியோக்களை நான் அடிக்கடி பார்க்கிறேன். பழைய சம்பவங்களை இப்போதும் நினைவுகூர்கிறேன். எனது தந்தை முகமது ஷெரீப் இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரை சேர்ந்தவர் ஆவார். இந்தியா எங்களது அண்டை நாடு. இதை மாற்ற முடியாது. நாம் ஏற்கெனவே 75 ஆண்டுகளை இழந்துவிட்டோம். இப்போது அடுத்த 75 ஆண்டுகள் குறித்து சிந்திக்க வேண்டும்.”– என்றார்.

# வைத்தியசாலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் மனிதாபிமானமற்றவை

## காசா சுகாதார அமைச்சு தெரிவிப்பு

காசாவின் வடக்கு பகுதியில் உள்ள வைத்தியசாலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் மனிதாபிமானமற்றவை என காசாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் இஸ்ரேலிய விமானத்தாக்குதலினால் காசா முழுவதும் 37 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், காசாவின் வடக்கு பகுதியில் மகாசி இடம் பெயர்ந்தோர் முகாம்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 16 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனியர்கள் இடம்பெயர்ந்துள்ள பாடசாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.











# அரசியல் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய வேட்பாளர்களுக்கே வாக்களித்தல் வேண்டும்!

## இப்படி வழிகாட்டுகின்றார் மன்னார் ஆயர்

(வாஸ் கூஞ்ஞ)

நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடிவந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:–

இலங்கை நாட்டு மக்களாகிய நாம் மீண்டுமொரு தேர்தலை எதிர்நோக்கி நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு இப்போது நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள இருக்கின்றோம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படடிருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் வன்னி தேர்தல் மாவட்டம் மற்றும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் என இரண்டிலுமாகச் சேர்த்து குறித்தொதுக்கப்பட்டுள்ள 12 ஆசனங்களுக்காக 45 அரசியல் கட்சிகளும் 46 சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன. வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 800க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வருகின்ற இந்த நாடாளுமன்றத் தேர்தலானது இலங்கை முழுவதும் – குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதியாகிய தமிழர் தாயகப் பகுதியிலும் – பலத்த எதிர்பார்ப்புக்கள் நிறைந்த தேர்தலாக அமைந்துள்ளது.

உரிமை மறுப்புக்கு இலக்கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல் தான்.

இந்த அரசியல் பிரதிநிதிகளாக போட்டியிடுகின்ற அனைவரும் இதன் கனதியை உணர்ந்தவர்களா என்பது கேள்விக்குறியே.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்புமுனைகள் நிறைந்த ஒரு காலக்கட்டத்தில் நாம் நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலின்போது தெற்கில் ஏற்பட்ட அரசியல் சிந்தனை மாற்றம் வடக்கு கிழக்கிலும் இந்தத் தேர்தலில் ஏற்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.

அதேவேளையில் என்றுமில்லாதவாறு அதிக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள இத்தேர்தல் பொதுமக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்பதையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் தமது கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்.

30 வருட அகிம்சைப் போராட்டமும் 30 வருட ஆயுதப் போராட்டமும் எதற்காக ஏற்பட்டனவோ அந்தக் காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன. இந்நிலையில் நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடிவந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் நமது சுயநிர்ணய உரிமை உட்பட காலாகாலமாக நாம் வலியுறுத்திவருகின்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளை தொடர்ந்து முன்னகர்த்திச் செல்லக்கூடியவர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

உறவினர் , ஊரவர் , நண்பர் போன்ற வட்டங்களைக் கடந்து செயற்படக்கூடிய தமிழ்த்தேசியத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய இலஞ்ச ஊழலற்ற செயற்திறன்வாய்ந்த சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

மாறிவரும் அரசியல் பொருளாதார சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேர்தல் தொடர்பான சமகால அரசியல் தொடர்பான நமது பார்வையிலும் கண்ணோட்டத்திலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நமக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு தீர்மானமிக்க தேர்தலாக இது அமைவதற்கு நாம் எல்லோரும் நமது வாக்குரிமையைத் தவறாது பயன்படுத்துவோமாக. நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மிகுந்த பொறுப்புணர்வோடு செயற்படுவோமாக.– என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தேர்தல் தொடர்பான அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



# அனுதாப வாக்குகளுக்காக அல்லாமல், ஆக்கபூர்வமான அரசியலுக்காக பெண்களை உள்வாங்க வேண்டும்!



புருஜோத்தமன் தங்கமயில்

இளையோருக்கும் பெண்களுக்குமான அரசியல் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்கிற குரல்கள் தேர்தல் காலங்களில் அதிகமாக கேட்பதுண்டு. இம்முறையும் வேட்புமனுத் தாக்கல் முடியும் நாள் வரையில், அந்தக் குரல்கள் பலமாகவே கேட்டன. அதிலும் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இளையோருக்கும் பெண்களுக்குமான இடத்தை பிடித்து வைத்துக் கொண்டு, பெருந்தடையாக இருக்கும் மூத்த அரசியல்வாதிகளும்கூட அந்தக் குரல்களை எழுப்பினர்கள் என்பதுதான். வழக்கமாக மூத்த – பழுத்த அரசியல்வாதிகளினால் நிறையும் இலங்கையின் தேர்தல் களம், ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியோடு இளையோர், புதியவர்களுக்கான களமாக இம்முறை மாறியிருக்கின்றது. அதன் பிரதிபலிப்புக்களை, தமிழ்த் தேசிய அரசியல் களமும் ஓரளவு உள்வாங்கியிருக்கின்றது.

ஆனால், பெண்களுக்கான அரசியல் – தேர்தல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதில், தமிழ்த் தேசியக் கட்சிகளோ அமைப்புக்களோ போதிய அக்கறையை வெளிப்படுத்துவதில்லை. அண்மையில் கூடிக் கலைக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் கூட, பெண்களுக்கான பிரதிநித்துவம் என்பது பூச்சியமாக காணப்பட்டது. கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பதின்நான்கு பேரும் ஆண்கள். அதிலும், மூத்தவர்கள். ஒரு பெண்ணைக் கூட இணைக்கவில்லையே என்கிற எந்தவித ஆதங்கமோ அங்கலாய்ப்போ கூட அவர்களிடம் இருக்கவில்லை. ஒருவித ஆணாதிக்க மனநிலையோடு நின்று விடயங்களை அணுகி, கீழே போட்டுடைத்து ஓய்ந்திருக்கின்றார்கள். இந்தத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவின் போதும், ஒப்புக்காகவே பெண்களை இணைத்துக் கொள்ளும் நிலை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் காணப்பட்டது. வெற்றிபெறக் கூடிய, நாடாளுமன்ற அரசியலில் பங்களிக்கக் கூடிய பெண்களை உள்வாங்கி, அவர்களுக்கான அங்கீகாரத்தைக் கொடுப்பது சார்ந்து தமிழ்க் கட்சிகள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. பெண்களை வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கவில்லை என்றால், விமர்சனங்கள் எழும், அதனைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே வெற்றிக்கு அண்மையில் வரமுடியாத பெண்களை உள்வாங்குவதில் குறியாக நின்றிருக்கின்றன. இது, தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடங்கி அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் பொருந்தும்.

இலங்கை உள்ளிட்ட தென் ஆசிய நாடுகளில் பெண்களில் அரசியல் வருகை என்பது, பெரும்பாலும் அனுதாப அலையை வாக்குகளாக மாற்றுவதற்காகவே நிகழ்ந்திருக்கின்றது. உலகின் முதலாவது பெண் பிரதமரான சிறீமாவோ பண்டாரநாயக்க தொடங்கி, அவரின் மகள் சந்திரிக்கா குமாரதுங்க உட்பட, தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கடந்த காலங்களில் அழைத்து வரப்பட்ட சசிகலா ரவிராஜ், அனந்தி சசிதரன் வரையில் அதுதான் வரலாறாக இருந்திருக்கிறது. இந்தப் பெண்களின் குடும்ப உறுப்பினர் ஒருவர் அரசியல் ரீதியாக படுகொலை செய்யப்பட்டிருப்பார் காணாமல் ஆக்கப்பட்டிருப்பார் அல்லது பதவியில் இருக்கும் போது உயிரிழந்திருப்பார். அப்படியான சூழலில், இந்தப் பெண்களைக் காட்டி அனுதாப வாக்குகளைத் திரட்டுவதுதான் இந்தக் கட்சிகளின் பிரதான வேலையாக இருந்திருக்கின்றது. இந்தியாவின் இரும்பு மனுசியாக பார்க்கப்படும் இந்திரா காந்தியே, அப்படியான அரசியல் வாரிசுதான். இதில், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் மட்டுமே, அவரின் அரசியல் குருவான எம்.ஜி.ஆரையே கட்சிக்குள் எதிர்த்து நின்று தனித்துவமாக எழுந்து ஆட்சி அதிகாரம் பெற்றவர். அவர் மீது அனுதாப அலைக்கான அடையாளத்தை ஒட்ட வேண்டியதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 2015 பொதுத் தேர்தல் காலத்தில் சசிகலாவை தேர்தல் அரசியலுக்கு அழைத்துவர முயன்றது. குறிப்பாக, மறைந்த இரா.சம்பந்தனின் யோசனையில் அதற்கான வேலைகளில் எம்.ஏ.சுமந்திரன் ஈடுபட்டார். அது, பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை அடிப்படையாக கொண்ட அழைப்பல்ல, மாறாக மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மீதான அனுதாபத்தினை வாக்குகளாக மாற்றும் உத்தி சார்ந்தது. அடிப்படையில், அப்படியான நிலை என்பது அபத்தமானது. அதனால், ஒருபோதும் பெண்களுக்கான பிரதிநிதித்துவப் பங்களிப்பு காக்கப்படுவதில்லை. அதில், பெரும்பாலானவை, வெற்றுக்கனவுகளாவே முடிந்து போயிருக்கின்றன. அனுதாப அலைக்காக அரசியலுக்குள் உள்வாங்கப்பட்ட ஒருசில பெண்கள், தேர்தல் அரசியலுக்குள் வென்று, ஆட்சி அதி

தொடர்ச்சி▼



# அனுதாப வாக்குகளுக்காக அல்லாமல், ஆக்கபூர்வமான அரசியலுக்காக பெண்களை உள்வாங்க வேண்டும்!

தொடர்ச்சி▲

காரத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், ஆட்டுவிக்கும் கருவிகளாக அந்தப் பெண்கள் இருந்தார்களா என்றால், அதன் பதில் எதிர்மறையானது. பெண்களின் அரசியல் பங்களிப்பு, அதனூடான பிரதிநித்துவம் என்பது இயல்பாக நிகழ வேண்டும். அதற்கான வாய்ப்புக்களை தடுக்காது, அனுமதிப்பதுதான் கட்சிகள் செய்ய வேண்டிய முதல் வேலை.

இம்முறை தேர்தல் களத்தில், தேசிய மக்கள் சக்தியில்தான் கிட்டத்தட்ட 20 வீதமான வேட்பாளர்கள் பெண்கள். அவர்களினால்கூட குறைந்தது 35 வீதத்தைத் தாண்டிய வேட்பாளர் நியமனத்தை பெண்களுக்கு வழங்க முடியவில்லை. ஏனைய கட்சிகளை நோக்கினால், 10 வீதமளவில்தான், ஒப்புக்காக பெண்களுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலும், தமிழரசுக் கட்சியின் நியமனக்குழுவின் சார்பில் பேசிய சுமந்திரன், தகுதியுள்ள பெண் வேட்பாளர்களைத் தேடுவதில் சிக்கல் இருப்பதாக ஊடகங்களில் பேசியமை ஒரு மோசமான முன்னுதாரணம். ஏனெனில், அடுத்த நாளே, வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் போது, அதில் உள்ளடக்கப்பட்ட பெண்கள் தொடர்பில் எதிர்மறையான எண்ணங்களை ஏற்படுத்தும் அபாயம் காணப்பட்டது. அது, தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான பட்டியல் வெளியானதும் அதிகமாகவே பிரதிபலித்தது. குறிப்பாக, வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் (கிட்டு) மற்றும் சுரேக்கா சசீந்திரன் தொடர்பில் எதிர்மறைக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

கிட்டு என்கிற கிருஷ்ணவேணியின் கள அரசியல் பங்களிப்பு என்பது திடீரென ஒருநாளில், சுமந்திரன் வேட்பாளர் பட்டியலை வாசித்ததும் உருவானதல்ல. அவருக்கான கடந்த கால அரசியல் வரலாறு கனதியானது. தமிழ்த் தேசிய அரசியலில், 2004 பொதுத் தேர்தலிலேயே, நாடாளுமன்ற பிரதிநித்துவத்தைப் பெற்றிருக்கக் கூடிய ஒருவராக அவர் இருந்தார். அதனை, அன்றைக்கு கூட்டமைப்பின் பிதாமகர்களாக இருந்து, அரசியலை இயக்கிய தமிழீழ விடுதலைப் புலிகளே செய்யத் தலைப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. கிட்டு தமிழ்த் தேசிய கள அரசியலுக்குள் அரங்கச் செயற்பாடுகள் ஊடாக வந்தவர். கெடுபிடியான 2000களின் ஆரம்பத்தில், சிதம்பரநாதனின் அரங்கச் செயற்பாட்டுக்குழுவில், முக்கிய இளைஞியாக நின்று கவனம் பெற்றவர். அவர்களின் அரங்கச் செயற்பாடுகளும் சேர்ந்துதான் 'பொங்கு தமிழ்' என்ற தமிழ் மக்களின் பேரெழுச்சிக்கு வித்திட்டது. அதிலும், களச் செயற்பாட்டாளராக கிட்டுவின் பங்களிப்பு அதிகம். அன்றிலிருந்து, புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் கூறுகளில் பங்களித்து, தமிழ்த் தேசிய அரசியலில் இயங்கியவர். அவர், 2004 பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளராக உள்வாங்கப்பட்ட போது, தன்னுடைய இளைய வயதினைக் காட்டி ஒதுங்கினார். அந்த இடத்தில்தான், பத்மினி சிதம்பரநாதன் பிரதியிடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினரானார். முள்ளிவாய்க்கால் முடிவுகளின் பின்னரான காலத்திலும் அவரை, தேர்தல் அரசியலுக்குள் அழைத்து வருவது சார்ந்து கூட்டமைப்பு, குறிப்பாக தமிழரசுக் கட்சி அக்கறை காட்டியது. 2015 பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலுக்குள் கிட்டுவை உள்வாங்குவதற்கான பேச்சுக்களில் சுமந்திரன் ஈடுபட்டார். 2020 பொதுத் தேர்தல் காலத்திலும் அது தொடர்ந்தது. ஆனால், அப்போதெல்லாம் மறுத்துரைத்த கிட்டு, தற்போது தேர்தல் களம் வந்திருக்கிறார். அப்படியான நிலையில், 'தகுதியான பெண் வேட்பாளர்கள் இல்லை என்று ஊடகங்களில் நேற்று அறிவித்தோம், இன்று கிடைத்திருக்கிறார்கள்..' என்று சுமந்திரன் அறிவித்தமை அவசியமில்லாத ஒன்று. அவர், வேட்பாளர் பட்டியலில் கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களுக்காக கிட்டுவை, உள்வாங்கப் பேச்சுக்களை நடத்திய ஒருவர். அதனை, வெளிப்படையாக அறிவித்திருந்தால், எதிர்மறை விமர்சனங்கள் குறைந்திருக்கும்.

சசிகலாவின் தொலைக்காட்சிப் பேட்டியொன்று கடந்த வாரம் ஒளிபரப்பானது. அதில், தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பிலான சசிகலாவின் பார்வை எவ்வளவு குறுகியது என்பது அப்பட்டமான வெளிப்பட்டது. அந்தப் பேட்டி முழுவதும், தமிழரசுக் கட்சிக்காரர்கள், அனுதாப வாக்குகளுக்காக அன்றி, வேறெந்த தேவைக்காகவும் சசிகலாவை அரசியலுக்கு அழைக்கவில்லை என்பது புரிந்தது. அவரிடம் மக்களின் பிரச்சினைகள், போராட்டங்கள் தொடர்பில் எந்தவித புரிதலும் இல்லை. அரசியலை, பதவிகளுக்கான கட்டமாகவே பார்க்கும் தன்மை வெளிப்பட்டது. தான் பிரதிநிதித்துவம் செய்யப்போவதாக கூறும், தென்மராட்சியின் தேவைகள், அத்தியாவசியங்கள் தொடர்பிலேயே விளக்கமற்று இருக்கிறார். கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அவர், அதன் பின்னரான அரசியல் செயற்பாட்டுக் களத்தில் எந்தவித பங்களிப்பையும் செய்யவில்லை என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார். ரணிலுடனான சந்திப்பு, பெண்களுக்காக வேட்பாளர் நியமனம் உறுதிப்படுத்தலுக்கான சந்திப்பு என்று ஒருசில நிகழ்வுகளில் பங்களித்தமையைத் தாண்டி, அவருக்கும் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் எந்த வித தொடர்பும் அற்றே இருந்திருக்கிறார். அப்படியான நிலையில், கிட்டு போன்றவர்களின் கடந்த கால கள அரசியல்

தொடர்ச்சி▼



# அனுதாப வாக்குகளுக்காக அல்லாமல், ஆக்கபூர்வமான அரசியலுக்காக பெண்களை உள்வாங்க வேண்டும்!

தொடர்ச்சி▲

நிலைகளை, வெளிப்படையாக அறிவித்து இந்தத் தேர்தல் அரசியலுக்கு அழைத்துவரப் பட்டமைக்கான காரணங்களை விளக்கியிருக்க வேண்டிய தேவையை தமிழரசுக் கட்சி வெளிப்படையாக செய்திருக்க வேண்டும். ஏனெனில், வேட்பாளராக அறிமுகப்படுத்தப்படும் போதே, அவர் சுமந்திரனின் வெற்றிக்காக களமிறக்கப்பட்டவர் என்கிற தோற்றம் உருவாக்கப்பட்டமையானது அபத்தமானது. தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில், கிட்டுவின் உரை அதனைப் பிரதிபலித்தது.

இன்னொரு பக்கத்தில், சுரேக்காவின் வேட்பாளர் நியமனம் பற்றி சமூக ஊடகங்கள் மிகமோசமான கண்ணோட்டத்தில் விடயங்களை அணுகின. இரண்டாந்தர சிந்தனைகள் தொடங்கி, சாதிய அடையாளம் பூசி அவதூறுகளைப் பரப்பியமை வரையில் நடந்தன. அதுவும், தமிழ்த் தேசிய அரசியலைப் பேசுவதாகக் காட்டிக் கொள்ளும் தரப்பினர், அவற்றைச் செய்தார்கள் என்பதுதான், கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. சுரேக்காவின் அரசியல் அணுகுமுறை, கல்வித் தகைமை தொடர்பில் ஆராயப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியது. ஆனால், அவரின் சாதியப் பின்னணி, ஆராயப்பட்டு அதற்கு அர்த்தம் கற்பிக்கப்படுவதனை ஒருபோதும் அரசியல் விமர்சனமாக கருத முடியாது. விடுதலைக்காக போராடும் சமூகம், தன்னுள் காணப்படும் சாதிய, பெண் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் நின்று போராட வேண்டும். மாறாக, தடித்த சாதிய, ஆணாதிக்கத் தனத்தில் நின்று அரசியலை அணுகுதல், அதுவும் தமிழ்த் தேசிய அரசியலை அணுகுதல் என்பது, எமக்காக போராடி மாண்ட ஆயிரமாயிரம் உறவுகளை கேலிப்படுத்துவது போன்றது.

தமிழரசுக் கட்சி ஜனநாயகப் பாரம்பரியத்துக்குள்ளால் வந்து நிற்கும் கட்சி. ஏனைய முன்னாள் ஆயுத இயக்கங்கள் போன்றதல்ல. அந்த இயக்கங்களில் இருந்த பெண்கள், அந்த இயக்கங்கள், அரச ஆதரவுக் குழுக்களாக இயங்க ஆரம்பித்த தருணத்திலேயே, விலகிக் கொண்டு விட்டார்கள். அந்த இயக்கங்கள் முழுவதுமான ஆண்களினால் ஆட்சி செலுத்தப்படுவது. ஆனால், தமிழரசுக் கட்சி ஓர் ஆயுத இயக்கமல்ல. அதனை, 2004களில் மீட்டெடுத்துக் கொடுத்த புலிகள், பெண்களுக்கான பிரதிநித்துவம் தொடர்பில் அக்கறையோடு இயங்கிய போராட்ட இயக்கம். அப்படியான நிலையில், பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை காப்பதற்கான முயற்சிகளில் ஆக்கபூர்வமாக இயங்க வேண்டியது, தமிழரசுக் கட்சியின் கடமை. அதனை, அந்தக் கட்சி இதுவரையும் செய்யவே இல்லை. தேர்தல்கள் வந்தால் மாத்திரம், ஒப்புக்காக பெண் வேட்பாளர்களைத் தேடுவது என்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. கட்சிக் கட்டமைப்புக்குள் முதலில் குறைந்தது 30 வீதமான அளவு, பிரதிநிதித்துவத்தை வழங்கி பெண்களுக்கான அங்கீகாரத்தை உறுதி செய்ய வேண்டும். அப்படியான அங்கீகாரம், பெண்களை கட்சி – கள அரசியலுக்குள் அழைத்து வருவதற்கான உந்துதலை வழங்கும்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில், அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத் திருத்தத்தின் வழியாக, உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களில் பிரதிநிதித்துவம் ஓரளவு காக்கப்பட்டது. அதனால், சில பெண்களுக்கான களம் திறந்தது. குறிப்பாக, ஒரு உள்ளூராட்சி மன்றதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் முப்பது வீதமளவில் பெண்கள் இருக்க வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதனால், வட்டாரங்களில் நேரடியாக பெண்கள் வெற்றிபெறவில்லை என்றாலும், விகிதாரச முறையில் ஆசனங்களை வென்ற கட்சிகள் பெண்களுக்கு அவற்றை ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால், நேரடியாக வட்டாரங்களை வெல்ல முடியாத கட்சிகள், பெண்களை நியமிக்க வேண்டி வந்தது. அதுவும், விரும்பி நிகழ்ந்தது அல்ல. மாறாக, சட்டம் போட்டுச் செய்யப்பட்டது. அந்தச் சூழல், சில பெண்களை அரசியலுக்குள் அழைத்து வந்தது. ஆனாலும், அவர்களில் எத்தனை பேரை, கள அரசியல் எடுத்துக் கொண்டது அல்லது உள்வாங்கியது என்ற கேள்வி முக்கியமானது.

அர்த்தமுள்ள அரசியல் என்பது, அனைத்துக் கட்டங்களிலும் திறக்க வேண்டும். அதனை, தொடர்ச்சியாக போராடும் சமூகக் கூட்டமான தமிழர்கள், அர்ப்பணிப்போடு ஏற்றுச் சுமக்க வேண்டும். இல்லையென்றால், தமிழ்த் தேசிய அரசியலில் வெற்றுக் கட்டங்கள் உருவாகும். அதனை, கானல் வெளி நிரப்பும். அப்போது, மக்கள் தமிழ்த் தேசிய அரசியல் மீது நம்பிக்கையிழப்பார்கள். பெண்களை வாக்களிக்கும் இயந்திரங்களாகவோ, அனுதாப அலைக்கான கருவிகளாகவோ மாத்திரம் பார்க்காமல், அரசியலின் பெருங்கூறாக உள்வாங்க வேண்டும். அதுதான், உண்மையான பெண்களுக்கான அரசியல் பங்களிப்பையும் பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்யும்.

# ஐயாயிரம் ரூபா போலிநோட்டுகளுடன் பிள்ளையானின் கட்சியினர் மூவர் கைது

## அக்கரைப்பற்றில் கார் ஒன்றில் பயணித்த சமயம்

(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று நகர பகுதியில் 5 ஆயிரம் ரூபா கொண்ட 10 போலி நோட்டுக்கள், துண்டுபிரசுரங்கள், காணி உறுதிகள், மண் அனுமதிப்பத்திரங்களை கார் ஒன்றில் எடுத்துச் சென்றபோது விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியை சேர்ந்த 3 பேரையும் எதிர்வரும் 22 திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான்நேற்று சனிக்கிழமை உத்தரவிட்டார்.

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் பிரதேசத்தில் இந்தக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. கூட்டத்திற்கு கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிளையான் உட்பட கட்சிப் பிரமுகர்கள் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



அச்சமயம் தம்பட்டைவிசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து அக்கரைப்பற்று நகர பகுதியில் விசேட அதிரடிப்படையினர் வீதி கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கட்சியின் தேர்தல் பிரச்சார நடவடிக்கை முடிவடைந்து வாகனங்களில் மட்டக்களப்பை நோக்கி பிரயாணித்துக் கொண்டிருந்தன. அக்கரைப்பற்று நகர்பகுதியில் சம்பந்தப்பட்ட காரை விசே அதிரடிப்படையினர் நிறுத்தி சோதனையிட்டனர்.



இதன் போது காரில் இருந்தவர்களிடம் இருந்து 5 ஆயிரம் ரூபா பெறுமதிகான 10 போலி நோட்டுக்கள், காணி உறுதிகள், மண் அனுமதிப்பத்திரங்கள், 200 துண்டுபிரசுரங்கள், மோதிர அளவு எடுக்கும் கேர்வை என்பவை கண்டுபிடிக்கப்பட்டன. காரில் இருந்த 3 பேர. பொலிஸார் கைது செய்தனர். காரையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேற்படி கட்சியின் உறுப்பினர்கள் எனவும் களுவாஞ்சிக்குடியில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்ட வரும் 2015 ஆம் ஆண்டு துப்பாகியுடன் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்த ஒருவரும் அடங்குகின்றார் எனவும் கூறப்பட்டது. இவர்கள் சித்தாண்டி, மற்றும் வெலிகந்தை தரப்பளை பிரசேத்தைச் சேர்ந்தவர்கள் என விசேட அதிரடிப்படையினரது ஆரம்பகட்ட விசாணையில் தெரியவந்துள்ளது

இதனையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் அக்கரைப்




பற்று பொளிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் நேற்று அக்கரைப்பற்று நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திப்



பட்டமையை அடுத்து எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விசேட அதிரடிப்படையினரும் அக்கரைப்பற்று பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர்.










# தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொண்டு ஜனாதிபதியுடன் கைகோர்க்க முடியும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலை வெற்றிகரமாக எதிர் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியுடன் கைகோர்க்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டமும் தொலை நோக்குப் பார்வையும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே உள்ளது.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தக்கூடிய திறமையான உறுப்பினர்களைக் கொண்ட குழுவையும் ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டுள்ளது.

தன்னாலும் ஐக்கிய மக்கள் சக்தியாலும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட முடியும்.

குறுகிய அரசியல் நோக்கங்கள் அல்லாமல், 220 லட்சம் மக்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் உறுதிப்படுத்தும் நாடு உருவாக்கப்பட வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்தில் போட்டி மனப்பான்மையை விட, ஒன்றுபட்டு அதன்மூலம் அபிவிருத்தியை மேற்கொண்டு நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

இது குறித்து கவனம் செலுத்த வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.”– என்றார்















# மாத்தறையில் 9 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து





மாத்தறை , கொட்டகொட பிரதேசத்தில் ஒன்பது வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி ஒன்று வீதியில் பயணித்தஇரண்டு ஓட்டோக்கள், 2 மோட்டார் சைக்கிள்கள், 2 கார்கள், பஸ் மற்றும் டிராக்டர் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஒன்பது வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ; 9 Vehicles Collided With Each Other In An Accident விபத்தின் போது இரண்டு வெளிநாட்டுப் பெண்கள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீண்டும் யாழ்தேவி ரயில் சேவை




நாளை திங்கட்கிழமை முதல் வடக்கு ரயில் மார்க்கத்தின் யாழ்தேவி ரயில் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் யாழ்தேவி ரயில் சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு ரயில் மார்க்கத்தின் திருத்தப் பணிகள் காரணமாக தற்போது கொழும்பிலிருந்து மஹவ வரை மட்டுமே ரயில் சேவையில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படும் நிலையில் மீண்டும் யாழ் தேவி யாழ்ப்பாணம் வரை சேலைவியில் ஈடுபடவுள்ளமை வடக்கு மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




# கொள்ளையர்கள், கொலையாளிகள் எங்கள் ஆட்சியில் தப்பவே முடியாது!

## சூளுரைக்கின்றது தேசிய மக்கள் சக்தி

“தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கள்வர்கள், கொலையாளிகள் தப்பவே முடியாது. உரிய வகையில் விசாரணைகள் நடத்தப்பட்டு, சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் பீதியடைந்துள்ள சிலரே, தற்போது கூச்சலிடுகின்றனர்.”

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

“தேசிய மக்கள் சக்தியினர் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்னதான் கூறினாலும், மக்கள் எம்மை அங்கீகரித்துள்ளனர். எம்மைப் பற்றி மக்களுக்கு எதுவித பிரச்சினையும் கிடையாது. நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

தற்போது இடைக்கால அரசே செயற்படுகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு பிறகு பலமானதொரு அரசை அமைப்பதற்குரிய ஆணையை நாட்டு மக்கள் வழங்குவார்கள். நாடாளுமன்றத்துக்குத் தகுதியான எதிர்க்கட்சியொன்றையும் அனுப்புமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

கள்வர்களைப் பிடிப்பது பற்றி கேட்கின்றனர், மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை ஆரம்பமாகியுள்ளது. ஊடகவியலாளர் லஸந்த, விளையாட்டு வீரர் தாஜுதீன் உள்ளிட்டோர் தொடர்பான கொலை விசாரணைகள் இடம்பெறுகின்றன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் சிலர் குழப்பம் அடைந்துள்ளனர். நாம் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடமாட்டோம். நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறும். எனவே, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோர் குழப்பமடைந்து, கள்வர்களைப் பிடிக்குமாறு முன்கூட்டியே கூக்குரல் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை.” – என்றார்.

# இருபது வாகனங்கள் கேட்ட ரணிலுக்கு ஆக 3 மட்டுமே தருகின்றார் ஜனாதிபதி

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு 16 சமையல்காரர்கள், 163 பாதுகாப்புப் பணியாளர்கள், 30 குடைகள் மற்றும் 20க்கும் மேற்பட்ட வாகனங்கள் அடங்கிய விரிவான சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என விடுத்த கோரியதை தாம் நிராகரித்துள்ளளார் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்க விதிமுறைகளுக்கு இணங்க விக்கிரமசிங்கவிற்கு மூன்று வாகனங்கள் மாத்திரமே வழங்கப்படும் என ஜனாதிபதி பொது பேரணி ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பொது நிதி மூலம் ஆதரவளிக்கப்படுவதை தடுக்க அரசாங்கம் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தும் என்றார்.

மேலும், விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் இல்லங்களில் முன்னர் வைக்கப்பட்டிருந்த இரண்டு அம்புலன்ஸ்களை மீளப்பெற்றுக் கொண்ட திஸநாயக்க, இந்த வசதிகளை தனிப்பட்ட சொத்தாகக் கருதக் கூடாது எனக் குறிப்பிட்டார்.

பல்வேறு சிக்கல்கள் காரணமாக முன்னர் மூடப்பட்டிருந்த ஏறத்தாழ 400 ஊழல் கோப்புகளை அரசாங்கம் மீண்டும் திறந்துள்ளதாகவும் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.



ஊழலில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் வலியுறுத்தினார்.

தவறு செய்பவர்களை பொறுப்புக்கூற வைப்பதில் தேசிய மக்கள் சக்தியின்யின் உறுதிப்பாட்டை கேள்வி எழுப்பும் விமர்சகர்களை நோக்கி அவர், ”தவறு செய்தவர்களை தண்டிக்க தேசிய மக்கள் சக்தி என்ன செய்தது என்று கேள்வி கேட்பவர்கள், நாங்கள் திருடர்களைப் பிடிக்கத் தொடங்கும் போது புலம்ப வேண்டாம்” என்று குறிப்பிட்டார்.

# இன்றைய ராசி பலன்கள் -20.10.2024




இன்று அதைரியம் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். மனதில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை நீக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

மனக்குழப்பம் காரணமாக கோபமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு சுமையாக தெரியும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமாய் இருக்க உடற் பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றி குறித்த கவலை காணப்படும். உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொண்டு முன்னேற விரும்புவீர்கள். இது உங்களுக்கு திருப்திகரமான உணர்வை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒத்துப் போக முடியாத வகையில் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே அவருடன் அமர்ந்து அதனை தீர்த்துக் கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

உணர்ச்சிகரமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். எனவே அத்தகைய உணர்வுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களுக்கு பயன் தரும் நல்ல மாற்றங்களைக் காணலாம். உங்கள் நகைச் சுவை போக்கு காரணமாக நன்மை விளையும்.

வேலை மாற்றம் அல்லது அது தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.

உங்களின் மகிழ்ச்சியான நகைச்சுவையான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தி நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையும் மகிழ்ந்து பதிலுக்கு அன்பை செலுத்துவார்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சிறந்த பண இருப்பை பராமரிப்பீர்கள். .

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. ஆரோக்கியத்தில் பெரிய குறைபாடு காணப்படாது. என்றாலும் உடன் பிறந்தவர் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




நீங்கள் சிறப்பாக செயல் புரிந்து வெற்றி பெறுவீர்கள். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.

பணியிடத்தில் நன்மை விளையும். உங்கள் திறமையை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்தை உங்கள் துணையிடம் வெளிப்படையாக கூறுவீர்கள். உங்கள் நம்பிக்கை உணர்வின் மூலம் இது சாத்தியம் ஆகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருப்திகரமான, நகைச் சுவைபூர்வமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களை விரைந்து ஆற்றுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு முன்னேற்றகரமான பலன்களை அளிக்கும்.

உங்கள் பணியின் மூலம் நற்பெயர் பெறுவீர்கள். உங்களின் சுய முயற்சி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இது சாத்தியம் ஆகும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணை கைபேசி வாங்கித் தரக் கோருவார். அவரது தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி தரும் வகையில் செழிப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை லாபமாகக் கிடைக்கும்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி மற்றும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். இல்லையெனில் நற்பலன்கள் தாமதமாக விளையும். நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணியைப் பொறுத்த வரை கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். பணி சம்பந்தமான பயணம் மேற்கொள்ள நேரும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் நடத்துவீர்கள்.எனவே பேசும் போது கட்டுப்பாடு அவசியம்.

இன்று செழிப்பான நிதிநிலைக்கு உகந்த நாள் அல்ல. இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் சம்பாதிக்கும் திறன் குறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும்.




வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படுவதைவிட யதார்த்தமாக இருப்பது நல்லது. இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

எப்பொழுதும் போல பணியாற்றினால் பணியிடத்தில் வெற்றி பெற இயலாது. சிறப்பாக பணியாற்ற உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்தும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

அசௌகரியம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். தொண்டை எரிச்சல் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.




உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை குறைக்கலாம். கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கு படுத்திக் கொள்வது சிறந்தது.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உங்கள் துணையுடன் கோபமாக நடந்து கொள்வீர்கள். உங்களிடம் மகிழ்ச்சியான மன நிலை காணப்படாது. இதனால் இருவரிடையே முரண்பாடு ஏற்படும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய திட்டமிட வேண்டும்.

கண் தொற்று பாதிப்பு காணப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் -20.10.2024




இன்று சமநிலையான நாளாக இருக்காது. சில சூழ்நிலைகளை சமாளிப்பதன் மூலம் விஷயங்களை நன்கு புரிந்து கொள்ள இயலும். உங்களுக்கு இழப்புகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மேலதிகாரிகளுடனான உறவு நல்லுறவாக இருக்காது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவதை தவிர்த்திடுங்கள். அவர் சொல்வதைக் கேளுங்கள். இதனால் இருவரிடையே அன்பும் நல்லுறவும் வளரும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. பணத்தை சேமிக்க வேண்டும். பணத்தை பாதுகாப்பதன் மூலம் இழப்பை தடுக்கலாம்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நாளாக அமையும். பணம் அல்லது வேலை தொடர்பான புது முயற்சியில் இன்று நீங்கள் இறங்கலாம்.

உங்கள் பணியில் உற்சாகமான கட்டம். பணிகளை அமைதியாக கையாள வேண்டும். இதன் மூலம் பணியில் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையான பேச்சை பராமரிப்பீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். எதிர்கால நலன் கருதி இன்று சிறப்பாக திட்டமிடுவீர்கள்.

இன்று எந்தவிதமான ஆரோக்கியப் பிரச்சினையும் காணப்படாது. இன்று முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பல வாய்ப்புகள் கிடைக்கலாம். அதனை முழுவதுமாக நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று அர்ப்பணிப்புடன், உங்கள் முயற்சி அனைத்தையும் செலுத்தி சிறப்பாக பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிக்கும் புரிந்துணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் மனதில் அன்பு உணர்வு பொங்கிப் பெருகும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சமூகமாக இருக்கும். உங்கள் குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய அன்றாட நடவடிக்கைகளில் எச்சரிக்கையான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். இன்று வளர்ச்சிக்கு அனுகூலமான நாள் அல்ல.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக கருதுவீர்கள். உங்கள் பணிகளில் தாமதம் காணப்படும். சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நல்லுறவைப் பராமரிப்பதில் தான் உறவின் நிலை சார்ந்துள்ளது. இதன் மூலம் இருவரிடையே உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

குடும்பத்திற்காக தேவையற்ற செலவு ஏற்பட்டு பணம் வீணாகலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணத்தை செலவு செய்யுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி உங்களுக்கு கவலையை அளிக்கும்.

